ஈழத் தமிழ் மக்களின் சுதந்திரத்திற்கான பொதுமக்கள் வாக்கெடுப்பு மாநாடு - 2024

# தமிழ் நாட்டு மக்களின் கூட்டுப் பிரகடனம்

சென்னை, தமிழ்நாடு - பெப்ரவரி 03, 2024

ஆதி காலத்திலிருந்தே, தமிழ்நாட்டு மக்களும், தற்போது இலங்கை என்று அழைக்கப்படும் தீவில் உள்ள ஈழத்தமிழ் மக்களும் இன, மொழி, கலாச்சாரம் மற்றும் மத மரபுகளின் வழியாக ஒன்றாக இணைக்கப்பட்டுள்ளதுடன், தமிழ்நாட்டு மக்கள், ஈழத் தமிழர்களுக்கு வரலாற்று ரீதியாக உதவிகளையும், பாதுகாப்பையும் வழங்கி வந்துள்ளனர், ஆகையாலும்;

இலங்கைத் தீவின் முதல் பூர்வீகக் குடிகள் ஈழத் தமிழர்கள், மற்றும் 16ஆம் நூற்றாண்டில் ஆரம்பித்த போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், மற்றும் ஆங்கிலேயர்களின் படையெடுப்பு தொடங்கும் வரை, அத்தீவில் தனித்தனி இறைமையுள்ள தமிழ், சிங்கள அரசுகள் இருந்துள்ளன என்பதுடன், மற்றும், 1833 இல் இருந்து மட்டுமே, ஆங்கிலேயர்களால் முழுத் தீவும் ஒன்றிணைக்கப்பட்டதுடன், அதன்பின்னர், 1948 இல் ஆங்கிலேயர்கள் தீவை விட்டு வெளியேறியபோது, தமிழர்களின் அனுமதியின்றி அதிகாரம் ஒருதலைப்பட்சமாக சிங்களவர்களிடம் ஒப்படைக்கப்பட்டபோது, சுயநிர்ணய உரிமையைப் பயன்படுத்துவதற்கான எந்த வாய்ப்பும் ஈழத் தமிழர்களுக்கு வழங்கப்படவில்லை, ஆகையாலும்; மற்றும்

1948 ஆம் ஆண்டு முதல் சிங்களவர்கள் ஆதிக்கம் செலுத்தி வருகின்ற இலங்கை அரசாங்கங்கள், ஈழத் தமிழர்களை அடக்கி ஒடுக்கி ஆட்சி செய்து, பல ஆயிரக்கணக்கான தமிழ் மக்களைக் கொன்று, தமிழ் இனப்படுகொலை செய்து, முழுத் தீவையும் கைப்பற்றி அதில், ஒற்றை சிங்கள பௌத்த நாட்டை உருவாக்கும் குறிக்கோளுடன், தற்போது தமிழர்களின் தாயகத்தை அடாவடித்தனமானமாகவும், வேகமாகவும் அழிப்பதில் ஈடுபட்டுள்ளனர், ஆகையாலும்;

எனவே, இப்போது, தமிழ்நாட்டு மக்கள் சார்பில் கூட்டாக பின்வருவன பிரகடனப் படுத்தப்படுகின்றன:

1. 1987ஆம் ஆண்டு செய்து கொள்ளப்பட்ட இந்திய-இலங்கை ஒப்பந்தத்தில், இலங்கையின் வடக்கு-கிழக்கு மாகாணங்கள் தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய வாழ்விடங்கள் எனத் தெரிவிக்கப்பட்டதன் மூலம், ஈழத்தமிழ் மக்களின் தாயகத்துக்கு சர்வதேச அங்கீகாரம் கிடைத்திருப்பதைச் சுட்டிக் காட்டுவதோடு, ஈழத்தமிழ் மக்களின் ஆறு ஆயுதம் தாங்கிய விடுதலைப் போராட்ட இயக்கங்களுக்கும், ஈழத் தமிழர்களின் பிரதான அரசியல் கட்சியான தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும், அன்றைய இந்தியப் பிரதமர் வழங்கிய வாக்குறுதியின் பிரகாரம், வடக்கு-கிழக்கு மாகாணங்களின் இணைப்பை 19 வருடங்களாக உறுதிப்படுத்திய இந்தியா, 2007ம் ஆண்டில், இலங்கை ஒருதலைப்பட்சமாக ஈழத்தமிழ் மக்களின் தாயகத்தை வடக்கு மற்றும் கிழக்கு என இரண்டு மாகாணங்களாக பிளவுபடுத்தியதைக் கருத்திற்கொண்டு, நிலத்தொடரான வடக்கு-கிழக்கு மாகாணங்களை மீண்டும் நிரந்தரமாக இணைத்து ஈழத்தமிழர் தாயகத்தைப் பேண இந்தியா தனது வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும்;

2. ஈழத்தமிழர் தாயகத்தை அழிக்கும் இலக்குடன் சிங்கள-இலங்கையானது தமிழர் நில அபகரிப்பு, தமிழர்-வரலாற்று இடங்களை அழித்தல், மேலும் சிங்களக் குடியேற்றங்கள்,

பௌத்த விகாரைகள் போன்றவற்றை கட்டும் நடவடிக்கைகளில் துரித கதியில் ஈடுபட்டு வருகின்றதை கருத்தில் கொண்டு, இந்த தமிழர் விரோதச் செயற்பாடுகளை உடனடியாக நிறுத்தி, ஈழத்தமிழர் தாயகத்தை பாதுகாக்க இந்தியா உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்;

3. ஏற்கனவே தமிழ் மக்களால் நிராகரிக்கப்பட்ட இலங்கையின் அரசியல் அமைப்பின் 13வது திருத்தத்தை, தேசிய இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வாக, இந்தியா ஈழத் தமிழ் மக்கள் மீது திணிக்கவோ, நிர்ப்பந்திக்கவோ கூடாது;

4. ஈழத்தமிழ் மக்களின் பிரிக்க முடியாத உரிமையான சுயநிர்ணய உரிமையை இந்தியா முறையாக அங்கீகரித்து, தீவின் வடக்கு-கிழக்குப் பிராந்தியத்தில் உள்ள அவர்களின் பாரம்பரிய தாயகத்தில், சர்வதேச சட்டங்களின் படி அவர்களின் அரசியல் நிலையை சுதந்திரமாக தீர்மானிக்க இந்தியா உதவ வேண்டும்;

5. ஈழத்தமிழ் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும், இனப்படுகொலை மற்றும் தமிழர்களுக்கு எதிரான கடந்தகால அத்துமீறல்கள் மீண்டும் நிகழாமல் இருப்பதை உறுதி செய்யவும், தமிழ் ஈழத்தில் ஐக்கிய நாடுகள் சபையின் இடைக்கால நிர்வாகத்தை (UN Transitional Administration) நிறுவும் பொருட்டு, சர்வதேச பங்காளி நாடுகளுடனும், ஐக்கியநாடுகள் சபையுடனும் இந்தியா இணைந்து பணியாற்ற வேண்டும் எனவும், மேலும் சுதந்திர இறையாண்மை கொண்ட தமிழீழத்தின் அரசியல் அந்தஸ்தை சட்டரீதியாகவும், சனநாயக ரீதியாகவும், அமைதியாகவும் தீர்மானிக்க, புலம்பெயர் தமிழர்கள் உட்பட ஈழத் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையைப் பயன்படுத்துவதற்கு சுதந்திரத்திற்கான பொது மக்கள் வாக்கெடுப்பு (Independence Referendum) நடத்த இந்தியா உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்; மற்றும்

6. ஈழத்தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் இனப்படுகொலைகளை விசாரிக்க ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவை (United Nations Human Rights Council) நடவடிக்கைகளை இந்தியா ஆதரிக்கவும், வழிநடத்தவும் வேண்டும், மேலும் இந்த வழக்கை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கும் (International Criminal Court) மற்றும் நீதிக்கான சர்வதேச நீதிமன்றத்திற்கும் (International Court of Justice) கொண்டு செல்ல இந்தியா உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வைகோ

வைகோ
நாடாளுமன்ற உறுப்பினர், மாநிலங்கள் அவை,
பொதுச் செயலாளர், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம்

29/2024

முனைவர் தொல்.திருமாவளவன்
நாடாளுமன்ற உறுப்பினர், மக்கள் அவை,
தலைவர், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி

செஞ்சி ந.இராமச்சந்திரன்
நிர்வாகச் செயலாளர், அ.இ.அ.தி.மு.க,
அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்
முன்னாள் மத்திய இணை நிதி அமைச்சர்

தி.வேல்முருகன்
தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினர்
தலைவர், தமிழக வாழ்வுரிமைக் கட்சி

சிந்தனைச் செல்வன்
தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினர்
பொதுச் செயலாளர், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி

பழ.நெடுமாறன்
நிறுவனர், உலகத் தமிழர் பேரவை,
தலைவர், தமிழர் தேசிய இயக்கம்
தமிழ் ஈழ விடுதலை ஆதரவாளர்கள்
ஒருங்கிணைப்புக் குழு

தேசிய முற்போக்கு திராவிட கழகம்

பிரேமலதா விஜயகாந்த்,
பொதுச்செயலாளர்
பொதுச் செயலாளர்,
தேசிய முற்போக்கு திராவிட கழகம்

பாவலர் மு.இராமச்சந்திரன்
தலைவர், தமிழர் தன்னுரிமை இயக்கம்

தா.வெள்ளையன்
தலைவர், தமிழ்நாடு வாணிகர் சங்கங்களின் பேரவை

மு.களஞ்சியம்
தலைவர், தமிழர் நலம் பேரியக்கம்

இராமு மணிவண்ணன்
பேராசிரியர், சென்னைப் பல்கலைக் கழகம்

பேராசிரியர் எம்.எச். ஜவஹருல்லா
தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினர்,
தலைவர், மனித நேய மக்கள் கட்சி

செந்தமிழன் சீமான்
தலைமை ஒருங்கிணைப்பாளர்,
நாம் தமிழர் கட்சி

புதுமடம் ஹலீம்
மாநில செயலாளர்,
மனித நேய மக்கள் கட்சி

திருமுருகன் காந்தி
மாநில ஒருங்கிணைப்பாளர், மே 17 இயக்கம்

ஏ.கே. கரீம்
தமிழ்நாடு மாநிலச் செயலாளர்,
இந்திய சமூக ஜனநாயகக் கட்சி

சி.மகேந்திரன்
கம்யூனிச தலைவர், தமிழ்நாடு

நீதிபதி டி.பரந்தாமன்
ஒய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி,
சென்னை உயர்நீதி மன்றம்

குடந்தை அரசன்
தலைவர், விடுதலை தமிழ்ப் புலிகள் கட்சி

எம்.ஜெகன் மூர்த்தி
தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினர்
தலைவர், புரட்சி பாரதம் கட்சி

அ.வியனரசு
தலைவர் தமிழ்த் தேச தன்னுரிமைக் கட்சி

அபு பைசால்
மாநிலச் செயலாளர்,
இந்திய தௌபீக் ஜமாத்

அ.வெற்றிச் செல்வன்
போலூர் நகரச் செயலாளர்
புரட்சிகர இளைஞர் முன்னனி

எஸ்.எம் சம்சுடீன்
தலைவர், தமிழ்நாடு ஒருங்கிணைப்பு இஸ்லாமிய கூட்டமைப்பு

எம்.பக்ருடீன்
தலைவர், உதவும் கரங்கள்

பழ.கருப்பையா
தலைவர், தமிழ்நாடு தன்னுரிமைக் கழகம்

பி. ஜோன் பாண்டியன்
தலைவர், தமிழக மக்கள் முன்னேற்றக் கழகம்

எஸ்.இராஜசேகரன்
ஆசிரியர் நம் வாழ்வு வாராந்தம்

இ.அங்கையற்கண்ணி
பொதுச்செயலாளர், தமிழ்நாடு முற்போக்கு பெண்கள் வழக்குரைஞர்கள் சங்கம்

சொ.ராஜா
மாநில அமைப்பாளர்
தமிழ்நாடு வர்த்தகர் சங்கம்

பாத்திமா பாபு
ஒருங்கிணைப்பாளர், ஸ்டெர்லைட் எதிர்ப்பு மக்கள் இயக்கம்

என்.ஏ.கோன்
அகில இந்திய செயலாளர் நாயகம்,
சமதாக் கட்சி

ஹெஸ்லி திப்கனி
தேசிய தொழில்பாட்டு செயலாளர்
மனித உரிமைகள் பாதுகாப்பு உசார் நிலை இந்தியா

ஜி.சுந்தரராஜன்
பூவுலகின் நண்பர்கள்

பா. ஏகலைவன்
ஊடகவியலாளர், இராவணா வலை ஒளி

---- ### ---